

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஜூலை 01, 2021 | புரட்சி 20 | முழக்கம் 18 | விலை: ரூ.3.00


# ஒன்றிய – மனுவாதிகளுக்கு எதிராக பரப்புரை: கழகத் தலைமைக் குழு முடிவு

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழு கூட்டம் 20.06.2021 ஞாயிறு மாலை 5 மணிக்கு இணையம் வழியாக நடைபெற்றது.

தலைமைக் குழுவிற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

தலைமைக்குழு துவங்கும் முன் தோழர்கள் மடத்துக்குளம் மோகன், கோவை மு.அறிவரசு ஆகியோர் மறைவிற்கு தலைமைக் குழுவில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து கழகத்தின் அடுத்த கட்ட நகர்வுகள், இணையதள செயல்பாடுகள் குறித்து பொதுச் செயலாளர் அறிமுக உரையாற்றினார்.

நடைபெற்ற தலைமைக் குழுவில் திமுக அரசின் சிறப்பான செயல்பாடுகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

திமுக அரசு நடைமுறைப்படுத்த முயற்சிக்கும் சமூக நீதி திட்டங்களான அனைத்து ஜாதி யினரும் அர்ச்சகர், தமிழர் வேலை வாய்ப்பு உரிமை, 7 தமிழர் விடுதலை, பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு இவற்றிற்கு ஒன்றிய பாஜக அரசும், ஆதிக்க பார்ப்பன சக்திகளும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இடையூறுகள் குறித்து பேசப்பட்டது. இதை எதிர்த்து ஆட்சிக்கு ஆதரவாக மக்கள் ஆதரவைத் திரட்டும் செயல்பாடுகளை முடுக்கிவிட முடிவெடுத்து விட்டது.

கோயில் நிலங்கள் மீட்பு நடவடிக்கை. ஈழத்தமிழ் ஏதிலியர்களுக்கான கொரோனா நிவாரண பொருட்கள் வழங்கியமை, நீட் பாதிப்புகளை ஆய்வு செய்ய நீதிபதி குழு ஆகியவை திமுக அரசின் சிறப்பான நடவடிக்கைகள் என தலைமைக் குழு வரவேற்கிறது.

கீழ்க்காணும் கோரிக்கைகளை தமிழ்நாடு அரசிடம் முன் வைக்க தலைமைக் குழுவில் விவாதிக்கப் பட்டது :

- தமிழக கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதற்கு முதலிடமும், விருப்ப மொழியாக சமஸ்கிருதமாகவும் ஆக்குவது.
- அனைத்து கிராமங்களிலும் மின் மயானங்கள் அமைப்பதற்கான நடவடிக்கை.
- அரசு நூலகங்களில் சமூக நீதி சிந்தனை குறித்த நாளிதழ்கள்,வார, மாத இதழ்கள் மற்றும் புத்தகங்களை இடம் பெறச் செய்தல்.

ஊரடங்கு அமுலில் இருப்பதால் கழகத்தின் அடுத்தக்கட்ட செயல்பாடுகளாக இணையவழி பயிற்சி முகாம்கள், பெரியாரியல் வகுப்புகளை தொடர்ச்சியாக நடத்துவது எனவும் ஊரடங்கு விலக்கிற்கு பின்னான கள செயல்பாடுகள் குறித்தும் திட்டமிடப்பட்டது.

மேலும் கழகத்தின் நிலைப்பாடுகளை எதிர்த்தும், மாறுபட்டும் பொதுவில், சமூக வலைதளங்களில் பதிவிடும் மாவட்ட கழக நிர்வாகிகள் மீது தலைமைக் கழகமும், தோழர்கள் மீது அந்தந்த மாவட்டக் கழகமும் உரிய நடவடிக்கை எடுக்க தலைமை குழு பரிந்துரைத்துள்ளது.

தலைமைக் குழுவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, உறுப்பினர்கள் அன்பு தனசேகரன், சூலூர் பன்னீர் செல்வம், இளையராஜா, இணையதள பொறுப்பாளர் விஜயகுமார், சமூக வலைதள பொறுப்பாளர் பரிமளராசன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்தனர்.

வெளியீட்டுக் குழு செயலாளர் கோபி இளங்கோவன், பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, அய்யனார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இணையம் வழியாக தொடர் கருத்தரங்குகள் தமிழ்நாடு மாணவர் கழகம் சீரிய முயற்சி

தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் திவிக இணையதள பிரிவு ஒருங்கிணைப்பில் பெரியாரியலை பரப்பும் நோக்கிலும் சமூக நீதி தலைவர்களை அடுத்த தலைமுறைக்கு அடையாளப்படுத்தும் நோக்கிலும் தொடர் இணைய கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டது.

1981ஆம் ஆண்டு மே 17ஆம் தேதி மனு தர்ம நகல் எரிப்புப் போராட்டம் மற்றும் 1953ஆம் ஆண்டு மே 27 பிள்ளையார் சிலை உடைப்பு போராட்டம் குறித்த செய்திகளை பகிர்ந்து கொள்ள "பெரியார் இயக்கங்கள் சந்தித்த அடக்குமுறைகள் மற்றும் முன்னெடுத்த கிளர்ச்சிகள்" என்னும் தலைப்பில் 11 நாட்கள் தொடர்ச்சியான கருத்தரங்கம் 16.05.2021 முதல் 26.05.2021வரை நடத்தப்பட்டது.

தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் ஒவ்வொரு தலைப்பிலும் நாள் ஒன்றுக்கு ஒருவர் உரையாற்றினர். கருத்தரங்கங்கள் தினமும் மாலை 6 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்நாடு மாணவர் கழகம் முகநூல் பக்கங்களிலும் நேரலை செய்யப்பட்டது.

16.05.2021, கள்ளுக்கடை போராட்டம் - சென்னை அன்பரசன், 17.05.2021 பிராமணாள் கஃபே பெயர் அழிப்பு- பொள்ளாச்சி சபரிகிரி, 18.05.2021, தேசியக் கொடி எரிப்பு அறிவிப்பும் அதன் தாக்கமும் - இரண்யா, 19.05.2021, மாணவர்களும் பெரியாரும்- நிலா கோவை, 20.05.2021, வைக்கம் போராட்டம் - நிர்மல் குமார் கோவை, 21.05.2021, குலக் கல்வித் திட்டம் - பிரபாகரன், நங்கவல்லி, மேட்டூர், 22.05.2021, பிள்ளையார் சிலை உடைப்பு - விஷ்ணு கோவை, 23.05.2021, அரசியல் சட்ட எரிப்புக் கிளர்ச்சி - திராவிட முருகன் சேலம், 24.05.2021, கம்யூனல் ஜி.ஓ. அரசியல் சட்டத் திருத்தம், மேட்டூர் மதிவதனி, 25.05.2021, பெரியாரின் தொலை நோக்கு சிந்தனைகள் -பிரசாந்த் திருப்பூர், 26.05.2021, மனுதர்ம நகல் எரிப்பு -சந்தோஷ் திருப்பூர்.

கருத்தரங்க இறுதி நாள் கழகப் பொதுச் செயலார் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

13.062021 அன்று சமூக நீதி முதல்வர் கலைஞர் 98ஆவது பிறந்தநாள் இணையக் கருத்தரங்கம் மாலை 6 மணியளவில் தொடங்கி நடை பெற்றது. திருப்பூர் மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் தேன்மொழி நிகழ்வை தொகுத்து வழங்கினார்

கருஞ்சட்டைக் கலைஞர் நூல் திறனாய்வு - மனோ கோவை, நவீன தமிழ்நாட்டின் தந்தை கலைஞர் - சந்தோஷ் மங்கலம், தெற்கிலிருந்து ஒரு சூரியன் - விஷ்ணு கோவை

இறுதியாக நிகழ்வின் நிறைவுரையாக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'பெரியார் கலைஞரை ஏன் எதற்காக ஆதரித்தார், கலைஞருக்கு பெரியார் சிலை வைக்க கூறியது' போன்ற வரலாற்றுத் தகவல்களை விரிவாக பகிர்ந்து கொண்டார்.

25.06.2021 அன்று சமூகநீதி காவலர் வி பி சிங் மற்றும் சேகுவேரா பிறந்தநாள் இணையக் கருத்தரங்கம் மாலை 6 மணியளவில் கருத்தரங்கம் தொடங்கி நடைபெற்றது. நிகழ்வை மேட்டூர் மதிவதனி தொகுத்து வழங்கினார்.

ஜெயபிரகாஷ், 'சேகுவேராவின் ஆதிக்கத்திற்கு எதிரான பயணம்' எனும் தலைப்பிலும், எட்வின் பிரபாகரன், பொள்ளாச்சி சபரிகிரி, 'சமூகநீதிக் காவலர் வி.பி. சிங்' எனும் தலைப்பிலும் உரையாற்றினர்.

## அம்பேத்கரை அவமானப்படுத்துவது முருகனா? முதல்வரா?

இந்திய அரசை ஒன்றிய அரசு என்ற சொல்லால் தான் இனி தமிழ்நாடு அரசு குறிப்பிடும் என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துவிட்டார். தமிழக பாஜக.வில் உள்ள மனுவாதிகள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் பம்மிக்கொண்டு இருக்கிறார்கள். பாஜக தலைவர் முருகன் மட்டும் அரசியல் சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கரை தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் இழிவுபடுத்தி விட்டார் என்று ஒரு குற்றச்சாட்டை கூறி தன்னுடைய அறியாமையை வெளிப்படுத்தி இருக்கிறார். இதற்கு மறுப்பு கூறும் வகையில் 24.6.2021 ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் ‘முகுந்த் பி உன்னி’ என்பவர் ஒரு கட்டுரையை எழுதி இருக்கிறார். அந்த கட்டுரையே முருகனுக்கு சரியான பதிலாக இருக்கிறது.

இந்திய அரசியல் சட்டத்தில் எந்த ஒரு இடத்திலும் மத்திய அரசு (Central Government) என்ற வார்த்தை குறிப்பிடப்படவே இல்லை. மாறாக ‘ஒன்றிய அரசு’ என்ற சொல் ஏராளமான இடங்களில் குறப்பிடப்பட்டு இருக்கிறது. அரசியல் சட்டப் பிரிவில் உள்ள 395 பிரிவுகளிலும் 22 பகுதிகளிலும் எந்த இடத்திலும் இல்லாத மத்திய அரசு என்ற சொல்லை நாம் இதுவரை கண்மூடித்தனமாக பயன்படுத்திக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதுதான் உண்மை. தமிழ்நாடு அரசு ‘ஒன்றியம்’ என்று அழைக்க துவங்கியிருப்பது வரவேற்கத் தக்க நல்ல திருப்பம். இந்திய அரசியல் சட்டத்தின் உண்மையான உணர்வை புரிந்து கொண்டு குறிப்பிடப்பட்டிருக்கிற ஒரு சொல் என்று கட்டுரையாளர் எழுதியிருக்கிறார். மத்திய அரசு என்ற சொற்றொடரை 1897ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி கொண்டு வந்த சட்டத்தில் தான் பயன்படுத்தியது. அதில் மத்திய அரசு என்றால் அதிபரைக் குறிக்கும் என்று விளக்கம் சொல்லி இருந்தது.

1946 டிசம்பர் 13ஆம் தேதி நேரு அரசியல் நிர்ணய சபையில் சட்டத்தின் நோக்கத்திற்கான தீர்மானத்தை கொண்டு வந்து பேசுகையில், ‘இந்தியாவில் அமையப் போகின்ற சுதந்திர இறையாண்மை உள்ள குடியரசில் விரும்புகிற பிரதேசங்கள் தங்களை இணைத்துக் கொள்ளலாம் என்று கூறியதோடு அப்போதுதான் மத்தியில் அமைகிற ஆட்சி வலிமையானதாக இருக்கும்’ என்றும் தெரிவித்தார். அரசியல் நிர்ணய சபையில் பாகிஸ்தான் பிரிவினை பிரச்சனை வருவதற்கு முன்பு நடந்த விவாதங்களில் இந்தியா ஒரு கூட்டாட்சி பொருந்திய நாடாக இருக்க வேண்டும். மாநிலங்கள் தன்னாட்சி பொருந்திய அமைப்பாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் பலரும் கருத்துக்களை தெரிவித்தார்கள். பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு தான் அங்கே இருந்த உறுப்பினர்களுடைய சிந்தனைப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டது. ஆனாலும் அம்பேத்கரை பொருத்தவரையில் ‘Union of States மாநிலங்கள் சேர்ந்த ஒன்றியம்’ என்ற கருத்தை அவர் உறுதியாக வலியுறுத்திக் கொண்டே இருந்தார். ‘Central government’ என்ற வார்த்தையை பயன்படுத்துவதை அம்பேத்கர் முற்றிலுமாக தவிர்த்தார். ‘இந்தியாவினுடைய ஆட்சி ஒன்றிய ஆட்சியாக இருக்கும்வரை தான் இந்தியா சிதறுண்டு போகாமல் இருக்கும்’ என்று அம்பேத்கர் அரசியல் நிர்ணய சபையில் தன்னுடைய கருத்தை பதிவு செய்திருக்கிறார். அவருடைய மொழியில் சொல்லவேண்டும் என்றால், ‘The federation is a union because it is Indestructiable’ ஆக ஒன்றியம் என்ற சொல்லை பயன்படுத்துகிறவர்கள்தான் அம்பேத்கரை உண்மையிலேயே மதிப்பவர்கள். ஒன்றியம் என்ற சொல்லை பயன்படுத்தக்கூடாது என்று கூறுகிறவர்கள் தான் அம்பேத்கரை அவமானப்படுத்துகிறவர்கள். தமிழ்நாட்டு பாஜக தலைவர் இந்த வரலாறுகளை புரிந்து கொண்டு பேசுவது நல்லது.

இந்திய அரசியல் சட்டத்தில் ஒன்றியம் என்ற சொல் 430 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசு என்ற சொல் ஒரு இடத்தில்கூட பயன்படுத்தப்படவில்லை. அது பொருத்தமற்ற சொல் என்று அரசியல் சட்ட ஆய்வாளர் சுபாஷ் காஷ்யாப் விரிவாகப் பதிவு செய்திருக்கிறார்.

# ‘ஜெய் ஹிந்து’ம் செண்பகராமனும் : உண்மை வரலாறு என்ன?

ஆளுநர் உரையை முடிக்கும்போது ‘ஜெய் ஹிந்த்’ என்று இருந்த சொல் நீக்கப்பட்டு விட்டதாம். பா.ஜ.க.வும் மனுவாதிகளும் துள்ளிக் குதிக்கிறார்கள். ‘ஜெய் ஹிந்த்’ என்ற இந்தி சொல்லுக்கு ஆளுநர் ஆங்கில உரையிலோ அல்லது தமிழ் மொழி பெயர்ப்பிலோ எதற்கு இடம் பெற வேண்டும்? அப்படி ஒரு சொல் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறதா? அதுவும் இல்லை. ‘ஜெய் ஹிந்த்’ என்றால் ‘இந்தியா வாழ்க’ என்று அர்த்தமாம்; மனுவாதிகள் கூறுகிறார்கள். ‘இந்துக்கள்’ வாழ்க; இந்துஸ்தானி வாழ்க என்பதே அதன் உண்மையான அர்த்தம் என்பதை அந்த சொல்லைக் காதால் கேட்கும் சக்தி உள்ள அனைவருக்குமே தெரியும்.

திருவனந்தபுரத்தில் தமிழ் வேளாளர் குடும்பத்தில் பிறந்த செண்பகராமன், பள்ளிப் படிப்பின்போது இந்தியாவை இந்து நாடாக்க வேண்டும் என்று அரசியலுக்கு வந்த, பாலகங்காதர திலகரால் ஈர்க்கப்பட்டு, பாரத மாதா வாலிபர் சங்கத்தைத் தோற்றுவித்தவர். அப்போது ஜெர்மன் உளவாளியாக சென்னை மாகாணத்தில் செயல்பட்டு வந்த வால்டர் வில்லியம் ஸ்டிரிக்லாந்து என்பவருடன் தொடர்பை உருவாக்கிக் கொண்டு, ஜெர்மனிக்குப் போனார். இத்தாலி, ஜெர்மனி நாடுகளுக்குப் போய் பொறியியல் கல்வி பயின்றார். பிறகு ஜெர்மன் நாட்டு கப்பல் படையில் சேர்ந்தார். ஜெர்மனி நாட்டுக்காக முதல் உலகப் போரின்போது சென்னை கடற்கரைக்கு வந்த ஜெர்மன் போர்க் கப்பலில் வந்து, சென்னை உயர்நீதி மன்றம் அருகே கடற்கரையில் ‘எம்டன்’ குண்டுகளை வீசியவர் இந்த செண்பகராமன் (1914, செப்.22). தென்னிந்திய கடற்கரைப் பற்றிய விவரங்களை ஜெர்மனிய படைகளுக்கு தந்ததே செண்பகராமன் தான்.

‘பர்மா ஷெல்’ எண்ணெய் டாங்குகள் மீது குண்டு வீசியதால் தீப்பிடித்து எரிந்தது. இந்தத் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததாகவும் 13 பேர் காயமடைந்ததாகவும் சென்னையிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக உயிருக்கு பயந்து நகரைக் காலி செய்து விட்டு வெளியேறியதாகவும் ‘இந்து’ பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்த குண்டுவீச்சுகளை நடத்தி விட்டு ஜெர்மனிக்கு திரும்பிய செண்பகராமனுக்கு ஜெர்மன் இராணுவ உயர் அதிகாரிகள் இராணுவ மரியாதையுடன் வரவேற்றனர். ஜெர்மனியுடன் இணைந்து போர் நடத்தி இந்தியாவை பிரிட்டிஷாரிடமிருந்து மீட்டு ‘இந்துஸ்தானை’ உருவாக்க வேண்டும் என்பதே செண்பகராமன் இலட்சியம். கொலை சதி வழக்கில் அந்தமான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆர்.எஸ்.எஸ். முன்னோடி சாவர்க்கரை சிறையிலிருந்து மீட்க வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டவர்.

அந்த செண்பகராமன் தான் ‘ஜெய் ஹிந்த்’ என்று முதன்முதலாக முழங்கினார்; அது தேசபக்தி முழக்கம் என்று எழுதுகிறது ‘மனுவாதி’க் கூட்டம். காந்தியார் பேசிய ‘இந்திய விடுதலைக்கு’ நேர் முரணானது. செண்பகராமன் பேசிய ‘இந்து இராஷ்டிரம்’ பார்ப்பன மனுவாதிகள் ஹிட்லரின் ஜெர்மனியர் களுடன் உறவு கொண்டாடிய வரை தேச பக்தராக்கி அவர் முழங்கிய ‘ஜெய் ஹிந்தை’ ‘தேச பக்தி’ முழக்கமாக தூக்கிப் பிடிக்கிறார்கள். ஹிட்லரின் வாரிசுகள் தேச பக்திக்கு பாடம் எடுக்கின்றனர்!

## ‘வந்தே மாதரம்’ தேசபக்தி பாடல் அல்ல; இஸ்லாமிய வெறுப்பை உமிழும் பாடல்

‘ஜெய் ஹிந்த்’-தைப் போல ‘வந்தே மாதரம்’ என்ற சொல்லையும் தேசபக்தி முழக்கம் என்கிறார்கள் ‘சங்கிகள்’; அது உண்மையல்ல.

பக்கிம் சந்திரா சட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனர் 1880இல் எழுதிய ‘ஆனந்த மடம்’ என்ற வங்க மொழி நாவலில் இடம் பெற்றுள்ள ஒரு பாடல் அது. அப்போது ஆட்சியிலிருந்த கிழக்கிந்திய கம்பெனி, முஸ்லிம் மன்னர்கள் சிலருடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு சென்னை, பம்பாய், கலகத்தா நகரங்களில் காலூன்ற முயற்சித்த காலகட்டம் அது. முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியை ஆயுதம் தாங்கிய போர் மூலம் ஒழித்துவிட்டு, இந்து - ஆங்கிலேய ஆட்சியை உருவாக்க வைணவ இந்துக்கள் ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதே நாவலின் மய்யமான கருத்து. சத்யானந்தா என்ற கதை நாயகன், இந்து இளைஞர்களைத் திரட்டும்போது, அந்த கதாநாயகன் பாடும் பாடலே ‘வந்தே மாதரம்’.

“நமது தாய்நாட்டை விடுவிப்பதற்கு இனம் - மதம் - பண்பாடு பெருமையைக் காப்பதற்கு, முஸ்லிம்களை ஒழித்தாக வேண்டும்; அவர்களை ஒழிக்காவிட்டால் நமது தர்மத்துக்கு எதிர்காலமே இல்லை; 7 கோடி இந்துக்கள் வாளேந்தி களத்தில் குதிப்போம்” என்பதே வந்தே மாதரம் பாடலின் கருத்து. வந்தே மாதரம் பாடலைப் பாடி வைணவ இந்து இளைஞர்கள் முஸ்லிம்களை கொலைசெய்து, முஸ்லிம் பெண்களை ‘பாலுறவு’ வன்முறைக்கு உள்ளாக்கி முற்றாக ஒழித்து விட்டு, காளி தேவி முன் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். அப்போது கதாநாயகன் சத்யானந்தாவிடம், “நாம் தான் முஸ்லிம்களை அழிந்து ஒழித்து விட்டோமே; இந்து இராஜ்யம் வரவில்லையே; ஆங்கிலேயர்கள் தானே ஆட்சி செய்கிறார்கள்?” என்று கேட்கிறார்கள். அதற்கு கதையின் நாயகன் சத்யானந்தா, “இப்போது நமக்கு எதிரிகளே இல்லை; ஆங்கிலேயர்கள் நம்முடைய நண்பர்கள்; அவர்கள் தங்கள் அதிகாரங்களை நம்முடைய விஷ்ணு கடவுளுக்குத் தான் காணிக்கையாக்கியிருக்கிறார்கள்” என்று பதில் கூறுகிறார்.

இப்படி இஸ்லாமியர் ஒழிப்பையும் ஆங்கிலேயர் ஆதரவையும் கொண்டாடும் ‘வந்தே மாதரம்’ - மனுதர்ம கூட்டத்துக்கு தேசபக்தி பாடலாகி விட்டது. காந்தி ‘வந்தே மாதரம்’ பாடலை ஏற்பதற்கு மறுத்து விட்டார்.

1937இல் காங்கிரஸ், இப்பாடலில் இடம் பெற்ற இஸ்லாமிய எதிர்ப்பு கருத்துகளை ஏற்க மறுத்து விட்டது. தேசிய கீதமாக்க முடியாது என்று கூறி விட்டது.

2006இல் ‘வந்தே மாதரம்’ பாடலின் நூற்றாண்டாகக் கருதி, இந்தியா முழுதும் பள்ளிகளில் பகல் 11 மணிக்கு பாடலாம். அதில் இடம் பெற்றுள்ள முஸ்லிம் எதிர்ப்பு வரிகளைப் பாட வேண்டாம். விருப்பமில்லாத பள்ளிகள் வந்தே மாதரத்தைப் பாடத் தேவையில்லை என்று ஒன்றிய காங்கிரஸ் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியது.

உண்மையில், 1996 - ‘வந்தே மாதரம்’ பாடலுக்கு நூற்றாண்டே அல்ல; 1870இல் எழுதப்பட்டு, 1882இல் ஆனந்த மடம் நாவலில் சேர்க்கப்பட்ட பாடலுக்கு 1996 எப்படி நூற்றாண்டு ஆக முடியும்?

‘வந்தே மாதரம்’ பாடலைப் பாட மறுப்பவர்களை தேச துரோகிகள் என்று அப்போது குற்றம் சாட்டியது பா.ஜ.க.! பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இப்பாடலை மதராஸாக்கள் (முஸ்லிம் பள்ளிகள்) உள்ளிட்ட அனைத்து பள்ளிகளிலும் பாட வேண்டும் என்று கட்டாயப்படுத்தியது.

ஆக, ‘வந்தே மாதரம்’ தேசபக்தி பாடல் அல்ல; இஸ்லாமிய வெறுப்பையும் ஆங்கிலேயர் புகழ்ச்சியையும் கொண்டது. பாடலின் முதல் இரண்டு பத்திகள், ‘தாய் மண்ணைப் புகழ்கிறது’ என்பதாலேயே அது தேசபக்திப் பாடலாகி விடாது.

# ராஜாவை விசாரிக்கிறார் முருகன்!

பாரதிய ஜனதாவுக்குள்ளேயே ‘புரட்சி’! நம்புங்க! முருகன், ராஜாவை விசாரிக்கப் போறாரு! ஆமாம்! அதே ‘ஆன்டி இந்தியன்’ ஹரிஹர ராஜா சர்மாவைத் தான்! விசாரணை எப்படி நடக்கும்? இப்படித் தான்.

**முருகன் :** ராஜா, நீங்க - தேர்தலுக்கு கட்சிக் கொடுத்த 13 கோடியில் 4 கோடியை எடுத்து வீடு கட்டியிருக்கீங்கன்னு எனக்கு புகார் வந்திருக்கு!

**ராஜா :** புகார் வந்தால் விசாரணை நடத்துவீங்களோ... அந்த அதிகாரம் உனக்கு இல்லை. எனக்கு பணத்தை அனுப்பிய அமீத்ஷா கேட்கட்டும்; அல்லது மோடி கேட்கட்டும்; உங்களுக்கு எல்லாம் பதில் சொல்ல அவசியமில்லை.

**முருகன் :** நான் தான். இம் மாநிலத் தலைவர் என்னிடம் தான் புகார் வந்திருக்கு.

**ராஜா :** மாநிலமாவது... மண்ணாங்கட்டியாவது; மாநிலங்களையே நாங்க ஒழிச்சிகிட்டிருக்கிறோம் தெரியுமோ? அதுக்கு முதல் கட்டமா எங்க மாவட்ட பா.ஜக.வையே ஒழிச்சுகிட்டிருக்கிறேன். அவனுங்க எல்லாம் ‘ஆன்டி இந்தியனா’ ஆகி எனக்கு எதிரா தேர்தல்ல - முதுகில் குத்திட்டானுங்க. அவனுங்கள நான் சும்மா விடப் போவது இல்லை.

**முருகன் :** இப்படிப் பேசிப் பேசியே தமிழ் நாட்டுல கட்சிக்கு பாடை கட்டிட்டீங்க... அந்தக் காலம் முடிஞ்சு போச்சு; குற்றச்சாட்டுக்கு பதில் சொல்லுங்க.

**ராஜா :** நல்லா புரிஞ்சுக்க முருகா! இந்த ராஜா கையாடல் பண்றான்னா - அதுக்குள்ள ‘தேச பக்தி’ பதுங்கி இருக்குது. ‘தேச பக்தி’க்கு எதிரான முஸ்லிம் - கிறிஸ்துவ கைக் கூலிகளின் சதி இது. அவனுங்கள தேச விரோத சட்டத்தின் கீழே கைது செய்ய வேண்டும்!

**முருகன் :** அப்படிப் பேசாதீங்க! நான் எதுக்கு தலைவன்னு ஒருத்தன் இங்கே இருக்கேன்?

**ராஜா :** உன்னை யாருப்பா ‘தலைவன்னு’ ஒத்துகிட்டா! காவி கட்டி வேல் தூக்கி ஊர் ஊராகப் சுத்துறதுக்குத்தான் நீ தலைவன்; என்கிட்ட கேள்வி கேட்கிறதுக்கு இல்லை.

**முருகன் :** வேற வழியில்லை; மேலிடத்துக்குத் தான் இதை கொண்டு போகணும்.

**ராஜா :** என்ன பேச்சு பேசற நீ... தாராளமாகக் கொண்டு போ! அயோத்தியிலே இராமன் கோயிலுக்கு இடம் வாங்குறதுக்கு 16 கோடி கையாடல் மேல் மட்டத்துலேயே நடந்துருக்கு. அந்த அறக்கட்டளையே இப்ப விசாரணையில தான் இருக்குது; அது 16 கோடி ஊழல்; என்னுடையது வெறும் 4 கோடி.

**முருகன் :** இப்படி எல்லாம் பொறுப்பில்லாமல் பேசாதீங்க...

**ராஜா :** எனக்கு நீ பாடம் சொல்லித் தராதே; இராமன் கோயிலாக இருந்தாலும் சரி; எனக்கு வீடு கட்டினாலும் சரி; எல்லாம் இந்துக்களின் நன்மைக்காகத்தான். இந்துக்களுக்காகத்தான் நம்ம கட்சியே நடத்துறோம்; முதலில் கொள்கையைப் புரிஞ்சுகிட்டுப் பேசு. ‘ஆன்டி இந்தியனாகி’ விடாதே!

**முருகன் :** ஊழலிலும் கொள்ளையடிப்பதிலும்கூட கொள்கை இருக்குதுன்னு சொல்ல வர்ரீங்களா?

**ராஜா :** ஆமாம்! நிச்சயமாக. நான் ஒரு ‘சுயம் சேவக்’ கொள்கையில் ஊறிப் போனவன்; ‘பிர்மா’வின் தலையில் பிறந்த ‘பிர்மா’ வம்சம். காலில் பிறந்த நீ எல்லாம் என்னை விசாரிப்பது தர்மத்துக்கே இழுக்கு! ஒழுங்காக பதவியைக் காப்பாத்திக்க.

**முருகன் :** இப்ப புரியுது. ஏதோ உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். நீங்க நீங்கத் தான்; நாங்க நாங்கத் தான்; அது தான் அடிப்படையான நமது கொள்கை என்பதை அப்பப்போ மறந்துடுறேன். இனிமே நாம, அவுங்க அவுங்க இடத்துலே இருந்துகிட்டே இந்து ஒற்றுமைப் பேசுவோம்; மன்னிச்சிடுங்க; நமஸ்தே ஜீ! ஜெய் ஹிந்த்; வந்தே மாதரம்.

– கோடங்குடி மாரிமுத்து

# பிரதேசங்களின் இணைப்பே ‘இந்திய ஒன்றியம்’

## கொளத்தூர் மணி – விடுதலை இராசேந்திரன் விளக்கம்

***தமிழ்நாடு அரசு பயன்படுத்தி வரும் ஒன்றியம் என்ற சொல்லுக்கு பா.ஜ.க.வினர் எதிர்ப்பு தெரிவித்து வருவது குறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி அளித்த பேட்டி.***

சட்டத்தில், “India that is bharath shall be union of states” என்று அரசியல் சட்டத்தின் முதல் பிரிவே கூறுகிறது. அரசியல் சட்டத்தை ஆராய்ந்தெல்லாம் பார்க்க வேண்டாம். தொடக்கத்திலேயே இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. காவல் துறையில் தான் எழுதுவார்கள், கருப்பன் என்கிற, இராமசாமி அல்லது மணி என்று ஏதாவது ஒன்றை எழுதுவார்கள். இந்தியாவிற்கும் இரண்டு பெயர்களை வைத்திருக் கிறார்கள். எனவே இவர்கள் ஆங்கிலத்தில் இருப்பதை தமிழில் மொழி பெயர்ப்பதில்கூட பாரதம் என்ற சொல்லை ‘இந்தியா’ என்ற சொல்லிற்கு பயன்படுத்துகிறார்கள். ஆனால் சட்டத்தில் இருக்கும் சொல் ‘ஒன்றியம்’ என்ற சொல். ‘Panjayat Union’ என்ற சொல்லை ‘பஞ்சாயத்து மத்திய அரசு’ என்றா மொழி பெயர்க்கிறார்கள்? ‘ஊராட்சி ஒன்றியம்’ என்று தான் மொழி பெயர்க்கிறார்கள். அரசவையில் ஒன்றியம் என்ற சொல்லை குறித்து பல வாதங்கள் நடைபெற்றிருக்கின்றன.

நாங்கள் சொல்வது ஒரு பக்கம் இருக்கட்டும். மத்திய அரசின் சார்பில் வரும் ஆங்கில செய்திகள் எல்லாம் ‘Central minister’ என்றெல்லாம் பயன்படுத்து வதில்லை. ‘Union Minister’ என்று தான் பயன்படுத்து கிறார்கள். Central minister என்று பயன்படுத்தினார்கள் என்றால் மத்திய அமைச்சர் என்று மொழி பெயர்க்க லாம். ஆனால் அவர்களே Union minister என்று பயன்படுத்தும் போது அதை ‘ஒன்றிய அமைச்சர்’ என்று தான் மொழி பெயர்க்க வேண்டும். இது தான் சரியான மொழி பெயர்ப்பு. இவர்கள் தவறாக மொழிபெயர்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் எதை செய்தாலும் அதற்குள் ஏதோ இருப்பதைப் போல இந்த சங்கிக் கூட்டங்கள் அதை எதிர்த்துக் கொண் டிருக்கிறார்களே தவிர மிகச் சரியானச் சொல்லை காலம் கடந்தாவது இப்போது பயன்படுத்துவதிலும் அவர்களுக்கு உடன்பாடு இல்லை.

திமுக நீண்ட நெடுங்காலமாகவே ‘ஒன்றியம்’ என்று பயன்படுத்திவருவதை சட்டமன்ற உரை யிலேயே முதலமைச்சர் கூறியிருக்கிறார். இருந்தாலும் முன்னர் தவறாக கூட மத்திய அரசு அழைக்கப்பட்டு வந்திருக்கலாம். தவறை திருத்திக் கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, செய்த தவறையே மீண்டும் மீண்டும் செய் என்பது, முட்டாள் தனம். தவறை திருத்திக் கொண்டதை ஏன் என்று கேட்பது நியாயமானதாக இல்லை. அதைத் தான் இந்த சங்கி கூட்டம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

அங்கே மய்யத்திலே ஒன்றிய அரசின் தலைவராக இருப்பவரின் கருத்தும், சித்தாந்த திணிப்பும் என்பது ஒற்றை இந்தியாவை நோக்கி போவது. எனவே மாநிலங்கள் பெற்றிருக்கிற உரிமையெல்லாம் மெல்ல மெல்ல தங்கள் கையில் எடுத்து செல்கிற கபட நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கிற இதுபோன்ற ஒன்றிய அரசு இருக்கிறபோதுதான், ‘நாம் இல்லை; நீங்கள் எனக்கு மேலான அல்லது மத்திய அரசு அல்ல நாங்களெல்லாம் (மாநிலங்கள்) ஒன்றி நாங்களெல்லாம் சேர்ந்து எங்களுடைய பிரதிநிதியாக வைத்திருக்கிறோம்’ என்பதை நினைவூட்டுவதற்காக இந்த சொல்லை பயன்படுத்துகிற தேவை தற்போது வந்துள்ளது.

மாநிலங்களின் உரிமையை பறிக்கும் இவர்களுக்கு ஒரு தடுப்பணையை போட வேண்டும் என்பதற்காகத் தான் இந்தியாவிற்கே வழிகாட்டியாக தமிழ்நாட்டு முதலமைச்சர் இந்த சொல்லை கூறியிருக்கிறார். தற்போது அனைத்து மாநில முதல்வர்களும் இந்தச் சொல்லை பயன்படுத்த தொடங்கிவிட்டார்கள்.

ஒன்றியம் என்ற சொல்லை கூறியதற்கு சரியான நோக்கம் இருக்கிறது. இதைப்பற்றி கருத்தில் எடுத்துக் கொள்ளாமல் நாம் பழக்கத்தின் காரணமாக சில சொற்களை பயன்படுத்தி விட்டோமே இனி சரியான சொல்லை பயன்படுத்தினால் தான் ஒன்றிய அரசிற்கு உரைக்கும் என்பதாலும், தங்களுடைய நிலை இதுதான் என்பதை காட்டுவதற்காகவும் தான் இந்த சொல்லை பயன்படுத்தியாக வேண்டும் என்ற தேவை இருக்கிறது.

பழகிப் போனது என்பதால் தொடர்ந்து எதையும் நாம் பேசிக் கொண்டே இல்லை. பலவற்றை மாற்றிக் கொண்டிருக்கிறோம். பாஜக அரசு வந்தபின், ஆசிரியர் பிறந்தநாள் என்பது டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் சரியோ தவறோ, ஆனால் இவர்கள் ‘வியாசர்’ பிறந்த நாளை ஆசிரியர் தினம் என்கிறார்கள். உழைப்பாளர் தினம் மே 1 என்றால் இல்லை இல்லை எங்களுக்கு விஸ்வகர்மா பிறந்த நாள் என்கிறார்கள், குரு உற்சவ் என்கிறார்கள். ஏன் மாற்றுகிறார்கள்? இருப்பதே இருக்க வேண்டியது தானே ? ஆனால் இவர்கள் தங்கள் கொள்கைக்காக தவறாகக்கூட மாற்றிக் கொள்கிறார்கள். நாம் தவறாகக் கூறி வந்ததை மாற்றிக்கொண்டு தற்போது சரியாக பயன்படுத்தி வருகிறோம் இதில் அவர்களுக்கு என்ன வலிக்கிறது ?

அரசியல் சட்டத்தில் அதிகாரப்பூர்வ மொழி பெயர்ப்புகள் இருக்கின்றன. அதில் ஒன்றியம் என்ற சொல்லால் தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிகாரப் பூர்வ மொழி பெயர்ப்பையும் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள், இப்போது நாம் கூறுகிற சரியான மொழிபெயர்ப்பையும் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்றால் நீங்கள் நினைத்ததை செய்து கொள்ள இது புராண காலமல்ல, இதிகாச காலமல்ல இது ஜனநாயக காலம். மக்கள் உரிமை பெற்று தாங்களே அரசை நடத்திக் கொண்டிருக்கிற காலம். எனவே இங்கு எது சரியோ அதைத்தான் பேச வேண்டும். இதுவரை பேசாமலிருந்தது பிழையாகவே இருக்கட்டும் தற்போது சரியான சொல்லை கூறுகிறோம் அதை ஏற்றுத்தான் தீர வேண்டும். இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும் சரியான சொல் அதுதான். **(‘சன் நியூஸ்’ 5 நிமிடம் பேட்டி)**

### பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ‘சன் நியூஸ்’ கேள்விக் களத்தில் பங்கேற்று தந்த விளக்கம்

மோடி அரசிற்கு ஏதோ தற்காலிகமாக அழுத்தம் கொடுப்பதற்காக ‘ஒன்றியம்’ என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. அப்படி கூறினால் அதன் நோக்கத்தை சிதைப்பதாக மாறிவிடும். இந்திய அரசியலமைப்புபடி இந்தியா என்பதே ஒன்றிய அரசு தான். ‘Union of States’ என்பது கூறப்பட்டிருக்கிறது அரசியலமைப்பு சட்டத்தில். அமைச்சர்களை ‘Union Minister’ என்று தான் அழைக்கிறார்கள். Service commission-யை Union Public Service Commission என்று தான் அழைத்து வருகிறார்கள். நீதிமன்ற வழக்குகள் வரும் போதுகூட Union of India என்று தான் குறிப்பிடு கிறார்கள். இவையெல்லாம் ஏற்கெனவே இருப்பவை தான். ஆனால் கடந்த காலத்தில் இதை பயன் படுத்தாமல் தற்போது பயன்படுத்த வேண்டிய நிலைமை ஏன் வந்துள்ளது என்று கேட்கிறார்கள். ஏன் பயன்படுத்தப்படுகிறது என்றால், காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலத்திலும் சரி, வாஜ்பாயி தலைமையிலான ஆட்சி காலத்திலும் சரி ஏற்கெனவே இருந்த மத்திய, மாநில அடிப்படை உறவுகள் சீர்குலையாமல் அப்படியே இருந்து கொண்டு இருந்தது. அப்போதும் கூட மாநிலங் களுக்கான உரிமை போதவில்லை என்றும் நாம் கூறி வந்துள்ளோம். ஆனால் தற்போது மோடியின் ஆட்சி வந்த பிறகு ஒவ்வொரு மாநிலங்களின் உரிமைகளும் படிப்படியாக பறிக்கப்பட்டு அது ‘ஒற்றை ஆட்சி’ என்ற இலக்கை நோக்கி வேகமாக பயணிக்க ஆரம்பிக்கிறது. கல்வியை அவசர நிலை காலத்தில் பொதுப் பட்டியலுக்கு மாற்றிய போது கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்ற ஒற்றை குரல் தமிழ்நாட்டில் எழுந்தது. தற்போது உயர்கல்வித் துறை எங்களுடைய கட்டுப்பாடு என்று ஒன்றிய அரசு எடுத்துக்கொண்டது. வரி விதிப்பு, ரேசன் கார்டு, மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமலேயே ‘தேசிய கல்விக் கொள்கை, வேளாண் சட்டம்’ என்று இப்படி பலவற்றை மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கிறார்கள். எனவே மாநிலங்களின் ஒவ்வொரு உரிமையையும் நடுவண் அரசு என்று சொல்லிக் கொள்கின்ற அரசு படிப்படியாக அழித்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளில் தீவிரமாகின்ற நிலையில் தான் அதன் எதிர்வினையாக, இல்லை; நீங்கள் நடத்துவது ஒன்றிய அரசு தான். மாநிலங் களுக்கான ஒரு கூட்டாட்சி இங்கே இருக்கிறது என்பதைத் தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் இந்த சொல்லை பயன்படுத்துவதன் மூலம் அறிவித்திருக் கிறார். ஆளுநர் உரையில் கூட, ‘மாநில சுயாட்சியை நோக்கி இந்த ஆட்சி நகரும்’ என்பதை தமிழ்நாடு அரசு திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது.

வாஜ்பாயி ஆட்சி காலத்தில் சொல்லாத அந்த சொல்லை, மன்மோகன் சிங் ஆட்சி காலத்தில் சொல்லாத சொல்லை, இந்திரா காந்தி ஆட்சி காலத்தில் சொல்லாத சொல்லை தற்போது கையில் எடுக்க வேண்டிய அவசியத்தை மோடி ஆட்சி உருவாக்கியிருக்கிறது.

இந்த சொல்லை பயன்படுத்துவது தவறு என்று குறை சொல்பவர்களைப் பார்த்து நான் ஒரு கேள்வியை எழுப்புகிறேன். அரசியல் சட்டம் என்ன கூறுகிறது ? ‘India that is Bharath’ என்று எழுதி வைத்துள்ளீர்கள். நான் கேட்கிறேன், இந்தியா என்ற சொல்லை இதுவரை, பாரதிய ஜனதா கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிறதா? கட்சிக்கு இந்திய ஜனதா கட்சி என்று பெயர் சூட்டாமல் - பாரதிய ஜனதா கட்சி என்று ஏன் பெயர் சூட்டியுள்ளீர்கள். இதற்குப் பின்னால் உள்ள அரசியல் என்ன? பா.ஜ.க.வில் பல்வேறு துணை அமைப்புகளை வைத்துள்ளீர்கள், ஆர்.எஸ்.எஸ் அமைப்பிற்கு பல்வேறு துணை அமைப்புகளை வைத்துள்ளீர்கள், இத்தனை ஆர்.எஸ்.எஸ். துணை அமைப்புகளிலும் சரி, பாரதிய ஜனதா கட்சியின் துணை அமைப்புகளிலும் சரி ‘இந்தியா’ என்ற வார்த்தையை நீங்கள் ஏன் திட்டமிட்டு தவிர்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்? பாரதியம், பாரத் என்ற இந்த சொல் மட்டுமே குறியீடாக கூறப்பட்டுக் கொண்டே வருகிறது. பிரதமர் மோடி அறிவிக்கிற அத்தனை திட்டங் களிலும் ‘இந்தியா’ என்று பெயர் கொண்டுள்ள ஒரு திட்டத்தை இவர்களால் எடுத்துக் காட்ட முடியுமா? முடியாது. ஏன் இந்தியா என்ற சொல்லை தவிர்க்கிறீர்கள் என்று கூறினால், உங்களுடைய ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை உருவாக்கிய ‘கோல் வாக்கர்’ எழுதி வைத்திருக்கிறார். ‘நாமெல்லாம் பாரதியர்கள், பாரத் என்பதே நமது மதத்தைக் குறிப்பிடும்.

இந்தியா என்ற சொற்றொடர் இந்துக்களை மட்டும் குறிப்பிடுபவை இல்லை. இங்கே இருக்கிற இஸ்லாமியர்களை, கிருத்துவர் களையும் குறிக்கும் சொல். அது இந்துக்களை மட்டும் குறிக்கும் சொல் அல்ல. நாம் இந்துக்கள் என்று குறிப்பிடுவதற்கு பாரத் என்ற சொல்லைத்தான் பயன்படுத்த வேண்டும். அல்லது இந்துக்கள் என்று நேரடியாக பயன்படுத்தலாம். இந்தியா என்ற சொல்லை பயன்படுத்தக் கூடாது என்று ஆர்.எஸ்.எஸ் தத்துவ பிதாமகர் கோல்வாக்கர் எழுதி வைத்த கருத்தை நீங்கள் உங்கள் கட்சியில் பயன்படுத்து கிறீர்கள், அரசு திட்டங்களில் பயன்படுத்துகிறீர்கள், ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளில் பயன்படுத்துகிறீர்கள்’. மொழி வழி மாநிலம் கூடாது என்று ஆர்.எஸ்.எஸ் திட்டவட்டமாக அறிவித்த ஒரு கொள்கையாகும். எனவே மொழி வழி மாநிலத்தையும் நீங்கள் ஏற்கவில்லை, இந்தியா என்ற சொல்லையும் நீங்கள் ஏற்கவில்லை, பாரதியம் பாரதத்தை நோக்கி இந்துஇராஷ்டிரமாக இந்த நாட்டை அழைத்துச் செல்வதற்கு நீங்கள் போகிற முயற்சியினால் தான், இன்றைக்கு ஒன்றியம் என்ற சொல்லை ஒரு குறியீட்டுச் சொல்லாக பயன்படுத்தும் வரலாற்று நிர்ப்பந்தம் ஆகியிருக்கிறது. இந்தியாவை நீங்கள் ‘பாரதம்’ ஆக மாற்றும்போது மய்ய ஆட்சியை நாங்கள் ஒன்றியமாக மாற்றுகிறோம்.

இந்தச் சொல்லில் பயனுள்ளதா ? இல்லையா? என்பதை வரலாறு தான் முடிவு செய்ய முடியும். ஆனால் தற்போது ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்கான உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்த்து போராட்டக் குரல் எழுப்பிக் கொண்டுள்ளன. குறிப்பாக, ஜி.எஸ்.டி, பணமதிப்பிழப்பு, கல்வி உரிமை ஆகியவைகள், பாரதிய ஜனதா கட்சி அல்லாத அனைத்து மாநில முதல்வர்களும், தாங்கள் மாநிலத்தின் பிரதிநிதி என்ற முறையில் அவர்களெல்லாம் ஒன்றிணைந்து தங்களுடைய மாநிலங்களுக்காக, ஒன்றிய அரசை எதிர்த்து உரிமைக் குரல் எழுப்புகின்ற ஒரு நிலைக்கு இந்திய அரசியல் சென்று கொண்டிருக்கிறது. இந்த அரசியல் தான் நியாயமான அரசியல் மொழிவழி மாநிலங்களை எப்போது ஏற்றுக் கொண்டோமோ, அதே போல ஒரு மாநிலத்தின் இறையாண்மையை ஏற்றுக் கொண்ட பிறகு, இது தான் இந்திய அரசியலமைப்பு என்று ஏற்றுக் கொண்ட பிறகு ‘ஒன்றியம்’ என்று அழைப்பதால் பயனில்லை என்று எப்படி கூற முடியும். இதனால் பயனில்லை என்று கூறுகிறவர்கள் ஏன் மாநில உரிமையை பறித்து வைத்துக் கொண்டுள்ளீர்கள் ? உரிமைகளை பறித்து வைத்ததால் என்ன பயனை மாநிலத்திற்கு கொடுத்தீர்கள் ? பண மதிப்பிழப்பு மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் செய்ததனால் மாநிலங்களுக்கு என்ன பயன் கிடைத்தது ? ஜி.எஸ்.டி கொண்டு வந்து மாநிலங்களின் வரி விதிப்பு பறித்து வைத்தீர்கள் இதனால் என்ன பயன் மாநிலங்களுக்கு கிடைத்தது ? புதிய கல்வி கொள்கை மூலம் மாநிலங்களுக்கு என்ன பயன் ? இவற்றினால் மாநிலங்களின் மக்கள் உங்களை எதிர்த்து போராடுகிற நிலையைத் தான் உருவாக்கியிருக்கிறீர்கள். மாநிலங்களே இல்லாமல் அதிகாரக் குவியலை நோக்கி நீங்கள் பயணிக்கிற வேலைதான் பயனற்ற வேலை. இவற்றிலிருந்து மீட்கும் ஒரு சொல்லை பயனற்ற சொல் என்று சொல்வது அறியாமையின் வெளிப்பாடு.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்ணீர் அறிக்கை

# கழகத்தின் தூணாக செயல்பட்ட மடத்துக்குளம் மோகன் விடைபெற்று விட்டாரே!



***திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் மதிப் பிற்குரிய தோழர் மடத்துக்குளம் மோகன் அவர்களை நாம் இழந்து விட்டோம். இந்த கொடும் கொரோனா நோய்த் தொற்று அவரை நம்மிடமிருந்து பிரித்து எடுத்துச் சென்றுவிட்டது.***

பெரியாரியல் கருத்துக்களை தன் இளமை காலம் தொட்டு தெளிவான புரிதலுடன் அழுத்தமாக மனதில் பதித்துக் கொண்டவர்.

பெரியாரியலை பரப்புவதற்காக பொதுக் கூட்டங்கள், தெருமுனை கூட்டங்கள், எளிய வடிவிலான மந்திரமல்ல தந்திரமே நிகழ்ச்சிகள், இனிமையான அணுகு முறை இவற்றின் வழியாக இளைய தலை முறையிடம் எடுத்துச் செல்வதில் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளும், அதனால் விளைந்த பலனும் அளப்பரியது. பெரியாரியல் பயிரலங்கு களிலும் பெரியாரியலை எளிய வடிவில் கற்பிக்கும் அளவு ஆழ்ந்த வாசிப்பு திறனும், கொள்கைப் பற்றும் உடையவர்.

தமிழீழ விடுதலையின் பால் பெரும் அக்கறை கொண்டவர். விடுதலைப் புலிகளுக்கு தோள் கொடுத்தவர். ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் எழுதிய 'தம்பி ஜெயத் துக்கு' எனும் நூலில் தோழர் மடத்துக் குளம் மோகன், ஈழ ஆதரவு செயல்பாடுகளை குறிப் பிடும் அளவு ஈழ விடுதலைக்கு தன் பங்களிப்பை செய்தவர்.

தோழர்களை ஒருங்கிணைப்பது, அவர்களை அமைப்பாய் செயல் தளத்தில் இயங்க செய்வது என உழைத்த சிறந்த ஒரு தோழர்.

அவரை இழந்து வாடும் அவருடைய கொள்கை குடும்பத்தின் வாழ்விணையர், அன்பு மகள் ஆகியோரின் துயரில் நாமும் பெரும் துயரத்தோடு இணைந்து கொள் கிறோம்.

திராவிடர் விடுதலைக் கழகம் தன்னுடைய ஒரு மூத்த உறுப்பினரை இழந்து நிற்கிறது.

ஈடுசெய்ய முடியாத அவரின் இழப்பை அவர் காண விரும்பிய சுயமரியாதை சமத்துவ உலகை படைப்பதில், ஈடு செய்ய முயன்று, முனைந்து பணியாற்றுவோம்!

## பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன்: 'எங்களின் எதிர்கால நம்பிக்கையை நீங்கள் இப்படி குலைக்கலாமா மோகன்?' என்று விடுத்துள்ள துயர அறிக்கை

மடத்துக்குளம் மோகன் அவர்கள் நமது இயக்கப் பணிகளில் இருந்து விடைபெற்றுக் கொண்டு விட்டார். கொரோனா அவரையும் பறித்துக் கொண்டு விட்டது. நம்பவே முடியவில்லை, இந்த செய்தியை உள்ளம் ஏற்கவே மறுக்கிறது.

திராவிடர் விடுதலைக் கழகத் தூண்களில் அவர் ஒருவர். நமது இயக்கத் தின் எதிர்கால நம்பிக்கையாக அவரை நினைத்திருந்தோம். தலைமைக் குழு உறுப்பினர் என்ற பொறுப்பில் இருந்தாலும், அவரது இயக்கத் தொண்டு அதைவிட மகத்தானது. நகராட்சியில் அரசு அலுவலராக இருந்து கொண்டே திராவிடர் கழகத்தில் இணைந்து தீவிர களப்பணியாற்றி வந்தார். கோவை இராமகிருட்டிணன் திக வில் இருந்து பிரிந்து சென்ற போது அவரது தமிழ்நாடு திராவிடர் கழகத்திலும் பிறகு கழகங்கள் இணைந்து உருவாக்கிய தந்தை பெரியார் திராவிடர் கழகத்திலும் பிறகு திராவிடர் விடுதலைக் கழகத்திலும் பங்கேற்று செயல்பட்டார்.

உடுமலை, பொள்ளாச்சிப் பகுதிகளில் தனது மென்மையான அணுகுமுறைகளால் பல தோழர்களை திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைத்து தொடர்ந்து களப்பணி செய்து கொண்டே இருந்தார். தன்னை முன்னிலைப்படுத்தாமல் இயக்கத்தை முன்னிலைப்படுத்தியவர். உழைப்பை மட்டும் தரவில்லை தேவையானபோதெல்லாம் தனது சொந்த பணத்தையும் வெளியே யாருக்கும் தெரியாமல் செலவிடுவார்.

பணி ஓய்விற்குப் பின் திராவிடர் விடுதலைக் கழகத்தின் முழுநேர செயல்பாட்டாளராக அவர் மாறினார். தமிழகம் தழுவிய பொறுப்புகளில் பணியாற்ற வேண்டிய தோழராக பயன்படுத்த வேண்டும் என்று பல நேரங்களில் கழகத் தலைவரும் நானும் பேசியிருக்கிறோம்.

1983 ஆம் ஆண்டில் ஈழ பிரச்சனை தொடங்கிய காலத்தில் தன்னை தீவிரமாக ஈழ விடுதலை இயக்கங்களில் ஈடுபடுத்திக் கொண்டார். விடுதலைப் புலிகளின் கண்காட்சி, அவர்களின் இயக்கத்திற்கு நிதி திரட்டுதல் விடுதலைப் புலிகளின் பத்திரிக்கைகள், நூல்களைப் பரப்புதல் என்று அவரது பணி தொடர்ந்தது. அந்தக் காலத்திலிருந்தே நான் அவரிடம் நெருக்கமாக இருந்திருக்கிறேன். சென்னையில் புலிகளின் ஆதரவாளர்களாக நாங்கள் நாடகக் குழு ஒன்றை உருவாக்கி புலிகளின் வீர வரலாற்றை தமிழகத்தின் பல ஊர்களில் நாடகமாக நடத்தினோம். அதன் வழியாக திரட்டிய நிதியை புலிகளின் இயக்கத்திற்கு வழங்கினோம். உடுமலைப் பேட்டையில் 'தீர்வுக்காக' என்ற நாடகம் நடத்த நாங்கள் வந்த போது நாடகம் தொடங்க வேண்டிய சில மணி நேரத்திற்கு முன் அரங்கை மாற்ற வேண்டிய கட்டாயம் ஒன்று உருவானது. சில மணி நேரங்களிலேயே பம்பரமாக சுழன்று மோகனும் தோழர் களும் நாடக அரங்கை மாற்றுவதற்கு ஆற்றிய செயல் பாடுகள் இப்போதும் கண்முன் இருக்கின்றன. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தமிழக அரசியல் பொறுப்பாளராக செயல்பட்ட பேபி சுப்ரமணியமிடமும் விடுதலைப் புலி தோழர்களுடனும் மிக நெருக்கமாகப் பழகியவர் மோகன்.

களப்பணி மட்டுமல்ல கழக மேடைகளில் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தி பகுத்தறிவு பிரச்சாரம் செய்து வந்தார். கடந்த கொரோனாவின் போது நாள்தோறும் திராவிடர் விடுதலைக் கழகம் இணையதளப் பிரிவு நடத்திய சுமார் 80 காணொளி கருத்தரங்கங்களிலும் மோகன் தொடர்ந்து பங்கெடுத்து வந்தார். பல நேரங்களில் அலைபேசியில் தொடர்பு கொண்டு என்னிடம் பேசுவார். அவருடன் உரையாடுவதே எனக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தரும். கடந்த கால வரலாறுகளை பகிர்ந்து கொள்ளக்கூடிய விரல்விட்டு எண்ணக்கூடிய தோழர்களில் அவரும் ஒருவர். கடந்த கொரோனா காலத்திலும் பல ஈழ அகதிகள் முகாம் களுக்கு நிவாரணப் பணிகளை செய்து வந்தார். இப்போது மருத்துவ மனையில் இருந்த கடைசி நேரத்திலும் கூட, கொரோனா ஊரடங்கால் உணவு வழங்குவதற்கு உதவிட நிதி வழங்கி வந்ததை தோழர்கள் நெகிழ்ச்சி யுடன் கூறுகிறார்கள்.

ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர். அவரது அன்பு மகள் விவசாயத் துறையில் அரசு உயர் பதவியில் இருக்கிறார் அவர்களுக்கு ஆறுதல் கூற நம்மிடம் வார்த்தைகள் இல்லை. இயக்கமே ஒரு செயல் வீரரை இழந்து தவிக்கும்போது நம்மால் என்ன செய்ய முடியும் யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? எப்போதும் போல தோழர் மோகன் குடும்ப உறுப்பினர்களும் கழக குடும்பத்தின் உறுப்பினர்கள் தான். அவர்களோடு இயக்கம் எப்போதும் துணை நிற்கும்.

மடத்துக்குளம் மோகன் பிரிந்துவிட்டாரா? அவரை இனி சந்திக்க முடியாதா? அவரோடு பேச முடியாதா? இயக்க நிகழ்ச்சிகளில் அவர் இருக்க மாட்டாரா? என்று நினைக்கும்போதே நெஞ்சம் பதறுகிறது. எங்களின் எதிர்கால இயக்க நம்பிக்கையை நீங்கள் இப்படி குலைக்கலாமா மோகன்?

### இரங்கல் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தோழர் மடத்துக்குளம் மோகன் அவர்களின் சீரிய சமுதாய பணிகளை நினைவு கூறும் வகையில், 02.06.2021 அன்று மாலை 6 மணியளவில் முகநூல் பக்கத்தில் நேரலையாக நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், வெள்ளியங்கிரி (கோவை மாவட்டச் செயலாளர்), தேன்மொழி (தமிழ்நாடு மாணவர் கழகம்), விஜயகுமார் (இணையதள பொறுப்பாளர்), பரிமளராசன் (சமூக வலைதள பொறுப்பாளர்), சூலூர் பன்னீர் செல்வம் (தலைமைக் குழு உறுப்பினர்), தபசி குமரன் (தலைமை நிலைய செயலாளர்), திருப்பூர் துரைசாமி (பொருளாளர்), பால்.பிரபாகரன் (பரப்புரை செயலாளர்), இரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்) ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். தோழர் மடத்துக்குளம் மோகன் இணையர் ஜோதி மற்றும் அவரின் மகள் அறிவுமதி, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி ஆகியோர் தங்களின் துயரங்களை, நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

**வாசகர்களுக்கு...**

கொரோனா பெருந்தொற்று இடர்ப்பாடுகளால் மே 6, 2021 முதல் ஜூலை 1, 2021க்கு இடைப்பட்ட ஏழு வாரங்கள் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழைக் கொண்டு வர இயலவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து வாசகர்கள் ஆதரவு தர வேண்டுகிறோம்.

**– நிர்வாகி, 'புரட்சிப் பெரியார் முழக்கம்'**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 01st July 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN